**SJK(T) LADANG EDENSOR,**

**28400 MENTAKAB, PAHANG DARUL MAKMUR**

| | |
|---|---|
| பெயர் : | கிழமை : |
| ஆண்டு : | திகதி : |

<u>அ) வாசித்து அறிக</u>

பாசிச் செடிகள் குளங்கள், ஏரிகள், ஆறுகள், கடல்களின் அடிப்பகுதியில் முளைத்துச் செழிப்பாக வளர்ந்திருக்கும். இவை நீருக்கடியில் உள்ள தரையில் முளைத்திருப்பதால் இது சாதாரணமாக நம் கண்களுக்குப் புலப்படாது. ஆயினும், கடலடியில் முளைக்கும் கடற்பாசியின் இலையின் நீளம் 100 அடிகளுக்கு மேல் இருக்கும்.

அனைத்துப் பாசி வகைகளும் 'குளோரோஃபில்' என்றழைக்கப்படும் பச்சையத்தைக் கொண்டிருக்கும். இந்தப் பாசிகள் தமக்குத் தேவையான உணவைத் தாமாகவே தயாரித்துக் கொள்கின்றன. இந்தச் செயல்பாடு காளான்களிலிருந்து வேறுபடுவதாக உள்ளது.

கடற்பாசி இனங்கள் மீன்வளம் மற்றும் பிற கடல் உயிரினங்களுக்குத் தேவையான நாற்றாங்கால் வாழ்விடத்தை வழங்குகின்றன. பெரிய வகைக் கடற்பாசிகள் பச்சையத்தோடு மஞ்சள் நிறங்கலந்த மாநிறமுடையதாக இருக்கும். மாநிறக் கடற்பாசிகளில் சிலவற்றின் தண்டு சற்றுப் பருத்தும் தடித்தும் இருக்கும். இவை கயிறுகளாகப் பயன்படுவதும் உண்டு.

கடல் தாவரங்களிலேயே சிவப்பு நிறக் கடற்பாசிகள் கண்ணைக் கவர்பவையாகும். இச்சிவப்பு வண்ணக் கடற்பாசிகள் பெருமளவில் கடலடியில் இருப்பதால் கடல் நீரின் நிறம் மாறுவதும் உண்டு. செங்கடற் பகுதி செந்நிறமாகத் தோற்றமளிப்பதற்குக் காரணம் அக்கடலடியில் அதிகளவில் வளர்ந்து பரவியுள்ள

LIVEWORKSHEETS

ஆ) கருத்துணர் கேள்விகளுக்கு விடையளித்திடுக.

1. பாசிச் செடிகள் எங்குச் செழிப்பாக வளர்ந்திருக்கும்?

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

2. கடற்பாசிகள் எவ்வாறு உணவைப் பெறுகின்றன?

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

3. கடற்பாசிகளுக்கும் காளான்களுக்கும் உள்ள வேறுபாடுகள் என்ன?

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

4. மாநிறக் கடற்பாசிகள் எதற்குப் பயன்படுகின்றன?

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

5. செங்கடல் செந்நிறமாகத் தோற்றமளிக்க காரணம் என்ன?

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

6. பின்வரும் சொற்களுக்குப் பொருள் தருக.

1) நாற்றாங்கால்

..........................................................................

2) சாதாரணமாக

..........................................................................

LIVEWORKSHEETS